21.11.2022 அ.வ.எண். 126/2021 வா.சா.1 – ராஜா

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

முறையூரில் நான் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். ஆர்.ஜே.பி என்ற பெயரில் சீட்டு தொழில் நடத்தி வருகிறேன் என்று சொன்னால் இல்லை. பிரதிவாதி மகன் அழகுசுந்தரம் மருதுபட்டியில் முடிதிருத்தும் கடை வைத்திருந்தார். அவர் ரூ.2,00,000 சீட்டு போட்டு பணத்தை கட்டிமுடித்தார் என்று சொன்னால் சேரவும் இல்லை, நடத்தவும் இல்லை. நான் சீட்டு தொழில் நடத்திவருவதை ஊர் மக்களை விசாரித்தால் தெரியவரும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்து 8 செண்ட். நான் தாவா இடத்தை பார்த்தேன். 8 செண்ட் இருந்தது. அதற்கு நான்குமால் தெரியாது. பிரதிவாதிக்கு, தாவா சொத்து பூர்வீக சொத்து, வில்லங்கம் போட்டு பார்த்தேன். பிரதிவாதிக்கு அழகுசுந்தரம் என்ற ஒரு ஆண், ஒரு பெண். அழகுசுந்தரம் மற்றும் பிரதிவாதியின் மருமகனும் கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். 25.10.2016ம் தேதி கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. பூர்வீக சொத்தில் பிரதிவாதியின் வாரிசுகளுக்கும் பங்கு உள்ளது. சொத்தை விற்பதற்கு பிரதிவாதியும், அவரது மகனும் சொன்னார்கள். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்வதற்கு 1வாரத்திற்கு முன்பு சொன்னார்கள். எனது அறிவிப்பிலோ, பிராதிலோ பிரதிவாதி அவரது மகனும் தாவா சொத்தை கிரையம்கொடுக்க முன்வந்ததாக சொல்லவில்லை. தாவா சொத்தை ரூ.2,00,000ற்கு அடமானம் வைப்பதற்காக பிரதிவாதி மட்டும் வந்தார் என்றும், அடமானம் பத்திரம் போடுவதற்கு தான் சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை நானும், பிரதிவாதியும், அவரது மகன் அழகுசுந்தரம், மருமகன் ஆகியோர் சேர்ந்து சிங்கம்புணரி பத்திர எழுத்தரிடம் வைத்து எழுதினோம். பத்திரம் எழுதிவிட்டு கையெழுத்து போடுவதற்காக மட்டும் பிரதிவாதி மகன், மருமகனை போன் மூலமாக அழைத்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர்களை படித்துபார்க்க விடாமல் பத்திரம் பதிய நேரமாகிவிட்டது என்று கூறி அவசரமாக அவர்களிடம் கையெழுத்து வாங்கினோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை புஞ்சை மனையிடம் என்று கூறி கிரைய ஒப்பந்தம் போட்டேன்.

பிரதிவாதி ரூ.3 ½ லட்சம் சொன்னார் நான் கட்டுப்படி ஆகாது என்று சொல்லி ரூ.2 ½ லட்சம் பேசி முடிவு சொன்னோம். நான் கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு தாவா சொத்திற்கு விலை விசாரித்தேன். சென்ட்கணக்கில் விசாரிக்கவில்லை, மொத்தமாக விலை விசாரித்தேன். நான் கிரைய ஒப்பந்தம் போடும்போது தாவா சொத்தில் சென்ட் 1க்கு விலை ரூ.2லட்சம் விலை போனது என்று சொன்னால் சரியல்ல. இன்று கூட அந்த விலை இல்லை. இன்றைய மதிப்பு தெரியாது. முறையூருக்கும், தாளாப்பூருக்கும் 7கி.மீ தூரம். பிரதிவாதி அடமானப்பத்திரம் எழுத சொன்னார் என்றும், நான் அடமானப்பத்திரம் எழுதினால் ரூ.15,000செலவாகும் என்றும் ரூ.4,000 செலவு செய்து கிரைய ஒப்பந்தமாக எழுதினேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ரூ.20லட்சம் மதிப்பு போகும் என்றும், அதை 2 ½ லட்சத்திற்கு எனக்கு விற்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அவர் வாங்கிய கடனை கட்டிவிட்டார் என்றும், நான் 5 வட்டி கேட்டதால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்துவருகிறேன் என்றும், ஊரில் என்னை வட்டி ராஜா என்று கூப்பிட்டால் தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு கிரைய பத்திரம் பதிந்து கொடுக்கவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல.